
# கொங்கு

ஆசிரியர்:
புலவர் செ. இராசு

தை 2005 | 1974 சனவரி

நான்காவது உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாடு



யாழ் நகர் — வீரசிங்கம் மண்டபம்

25 காசு

அறிவியல் வரலாற்றுத் திங்களிதழ்

# கொங்கு

கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ

தேனடை 4 | 15—1—74 | தேனீ 1

## வணக்கம்

நான்காவது உலகத் தமிழ் மாநாடு யாழ்ப்பாணத்தில் கோலாகலமாக நடைபெற்றது. கடைசி நாள் நடந்த பொதுக் கூட்டத்தில் மேடைமீது அமர்ந்திருந்த இந்திய அறிஞர்களைப் பாதுகாக்காமல் அவர்கள் மீதும் கண்ணீர்ப் புகை வீசி அட்டூழியம் செய்தனர் இலங்கைக் காவல் துறையினர்.

அமைதியாகச் சொற்பொழிவு கேட்டுக்கொண்டிருந்த பொதுமக்கள் மீதே கண்ணீர்ப்புகை விசி, தடியடிப்பிரயோகம் செய்வது அநாகரிகம். அத்துடன் அரசியலில் எந்தவிதத்திலும் கலக்காத இந்திய அறிஞர்கள்மீதும் கண்ணீர்ப்புகை வீசியது மிருகத்தனமான செயல்.

இலங்கைக் காவலரின் இத்துடுக்குத்தனத்தைக் குறித்து, இலங்கை அரசைக் கண்டிக்குமாறு இந்திய அரசை வேண்டுகின்றோம்.

—ஆசிரியர்.

# யாழ் நகரில் தமிழ் விழா

நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு இலங்கையைச் சேர்ந்த யாழ்ப்பாணத்தில் கோலாகலமாக நடைபெற்றது. 1974 சனவரி மூன்றும் நாள் தொடங்கி ஒனபதாம் நாள் வரை கருத்தரங்கு சிறப்பாக நடைபெற்றது.

வணக்கத்திற்குரிய தந்தை தனிநாயக அடிகளாரும், இலங்கைக் கிளைத் தலைவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களும் முன்னின்று தொடங்கி வைத்தனர்.

பொதுக் கருத்தரங்கு ஈழநாட்டின் கலை, மொழி, குடியேற்றம், வரலாறு பற்றி ஆராய்ந்தது. இவை வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றன.

பிற்பகல் வேளையில் றிம்மர் மண்டபத்தில் (Trimmer Hall) சமுதாயம், இலக்கியம், சமயமும் மெய்ப்பொருளும், மொழியியல், அறிவியலும் நுட்பவியலும், தொல்லியலும் மானுடவியலும் என்ற தலைப்புகளில் நூற்றுக்கும் அதிகமான கட்டுரைகள் வந்திருந்தன. சுமார் 75க்குமேல் வாசிக்கப்பட்டு ஆராயப்பட்டன

ஒன்பதாம் நாள் வீரசிங்கம் மண்டபத்தில் நிறைவுக் கூட்டம் நடைபெற்றது. அடுத்த மாநாட்டை தமிழகத்து மதுரையில் நடத்துவதென்று முடிவு செய்யப்பட்டது.

இரவு (Palm Court) பாம் கோட் உணவகத்தில் விருந்துடன் விழா இனிது முடிந்தது,

ஒவ்வொரு நாளும் வீரசிங்கம் மண்டபம், திறந்தவெளிக் கலையரங்கு. சுண்டிக்குளி மகளிர் கல்லூரி ஆகிய இடங்களில் கலை நிகழ்சிகள் நடைபெற்றன.

சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் கண்காட்சி ஈழத்துச் சிறப்பையெல்லாம் எடுத்துக்காட்டியது.

ஒன்பதாம் நாள் ஒரு கலாச்சார ஊர்வலம் நடைபெற்றது. நூற்றுக்கும் மேற்பட்ட அலங்கார வண்டிகள் பங்கேற்றுச் சிறப்

பித்தன இடையிடையே பெருமழை பெய்தபோதிலும் இறுதியிடம்வரை ஊர்வலம் வந்து சேர்ந்தது ஈழத்து இளைஞர்களின் உறுதியையும் கட்டுப்பாட்டையும் காட்டின இன்று மின்கம்பி அறுந்து விழுந்து. பார்த்து நின்ற பொதுமக்களில் இருவர் இறந்துவிட்டனா.

பத்தாம் நாள் பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கலை நிகழ்ச்சிகளில் பங்குபற்றியோருக்குப் பாராட்டிதழ்கள் வழங்கப்பட்டன.

வெளிநாட்டு அறிஞர்கள் பொதுமக்களுக்கு உரையாற்ற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கொங்கு ஆசிரியர் புலவர் செ. இராசு, திருச்சி சமால் மகமது கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் நயினார் முகமது, தில்லியைச் சேர்ந்த இரவீந்தர் குமார் சேத் முதலியோர் மேடையிலிருந்தபோது இலங்கைக் காவல்துறை போதிய முன்னறிவிப்பின்றி, மேடையிலிருந்தோரை அகற்ற முயற்சிக்காமல் கூட்டத்தைக் கலைக்க கண்ணீர்ப்புகை வீசி தடியடிப் பிரயோகம் செய்து மூர்க்கத்தனமாக நடந்து கொண்டது. அமளியில் 12 பேர் உயிரிழந்தனர். இந்திய அறிஞர்கள் அரும்பாடுபட்டுத் தப்பிப் பிழைத்து வந்தனர்.

மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைத்த யாழ்நகர் கருப்புக்கொடியேற்றி துக்கம் காத்தது.

※

### ஈழத்தமிழ்

1 நீங்கள் எங்கே நிற்கிறீர்கள்? – எங்கே தங்கியிருக்கின்றீர்கள் ?

2. கை போடாதீர் – தொடாதீர்.

3. இருங்க - அமருங்கள.

4 இங்கே சே ட்டுகள் கிடைக்கும் - Shirts

5. பிடவை - புடவை,

6. ஒல்லாந்தர் - Hollanders.

[தொடரும்]

# பெரியாருக்கு அஞ்சலி

தமிழ் நெடுங்கணக்கில் சீர்திருத்தம் வேண்டும் என்பதை உணர்ந்து தாம் கருதிய சீர்திருத்தங்களைத் தானே கடைப் பிடித்துக் கடைசி காலம்வரை நடத்திக்காட்டிய தந்தை பெரியார் அவாகள் மறைந்துவிட்டார்கள். யாழ்நகர் மக்கள் பெரியார் இறப்புக்குத் தாம் துக்கம அனுபவித்தது பற்றிக் கூறித் தமிழ் நாட்டில் அவரது அடக்கம் பற்றிய நிகழ்ச்சிகளைக் கேட்டறிந்த னர். அவர்கள் தனித்தமிழ் கேட்டுக்கொண்டிருக்கும் வேளையில், தமிழகத்தில் தனித் தமிழ்நாடு கேட்ட பெரியா மறைந்ததை அவர்கள் பேரிழப்பாகக் கருதுகின்றனர்கள்.

நான்காவது உலகத் தமிழ் மாநாட்டில் தட்டச்சுப் பொறி பற்றி மூன்று எழுத்துரைகள வந்தன. லண்டனில் பணியாற் றும் மின்னியல் பொறியாளர் தில்லைநாயகம் என்பவர் 'Electronic Typewritter மின்னியல் தட்டசசுப் பொறி' பற்றிய கட்டுரை வாசித்தார். அவர் தமிழ் எழுத்துக்களுக்கு மின்னியல் குறுடீடு கள் அமைத்திருப்பதாகவும், மின்னியல் தட்டச்சுப் பொறியை தொலை அச்சு (Telex) போலவும், நூல்கள் அச்சிட அச்சு யந்திரம் போலரும் பயன்படுத்தலாமென்றும் எடுத்துரைத்தார்கள். அதற்காக தமிழ் வரிவடிவில் சில மாற்றங்கள் கோரினர். அதிச யிக்கத்தக்க அளவில் அவை கொங்கு அக்டோபர் இதழில் வெளி வந்த தமிழ் நெடுங்கணக்கு என்ற கட்டுரையில் கேட்டுள்ளவற் ருேடு ஒத்திருந்தது. அவர் இககட்டுரையைப் பார்க்கவில்லை. தாமே சிநதத்து உருவாக்கினர்.

தமிழ்நாட்டிலிருந்து வந்த கொடுமுடி ச. சண்முகன் அவர் களின் கட்டுரையும் 'இருமொழித் தட்டச்சு' என்பதாகும். மேலே கேட்ட எழுத்துச்சீர்மை இருநதால் தமிழையும் ஆங்கிலத்தையும் ஒரு பொறயில் அமைக்கலாம் என்பதாகும்.

ஈழத்திருந்து வி. கோவிந்தப் பிள்ளை என்பவரும் இதே வழி யில் சிந்தித்து தட்டச்சுப்பொறி பற்றிக் கட்டுரை வாசித்திருந் தார்.

கட்டுரைகள் தட்டச்சுப்பொறி பற்றியதாக இருப்பினும் தமிழ் வரிவடிவில் மாற்றம் கோருவதேயாகும்.

தட்டச்சுப் பொறிக்கு :

1. பெரியார் சீர் திருத்தம்: லை, ளை, றா, னா, ணா, னை, ணை.

2, உகர, ஊகார மெய்களுக்கு தனிக்குறி சேர்த்தல். குறியின் வடிவம் பற்றி மாறுபட்ட கருத்து இருந்தது. எனினும் தற்போது புழக்கத்திலுள்ள ு ூ குறிகளுக்கு பொது ஆதரவு இருந்தது.

3. ஆ, ஈ, ஊ. ஏ, ஐ—அா, இா, உா, எா, ஒா.

அச்சுப் பொறிக்கு :

1. மெய்ப்புள்ளியை தலைமேல் இடாமல் அருகில் இடுதல்.

2. இகர, ஈகார ஒட்டுக் குறிகளை, ஒட்டியிடாமல் தனித்து இடுதல்,

பெரியாரின் சிந்தனைப் போக்கில் மூன்று கட்டுரைகள் இந்தியா, ஈழம். பிரிட்டன் ஆகிய நாடுகளிலிருந்து அமைந்திருந்தது அன்னாருக்குச் சிறந்த அஞ்சலியாக அமைந்திருந்தது.

—*—

## தேதி

தேதி என்பதை இலங்கைத் தமிழர் திகதி என்றே எழுதுவர், அவர்கள் தேதியிடும் முறை இந்தி, சிங்கள மொழிகளின் இயல்புக்கேற்றவாறு அமைந்துள்ளது. 1974 ஆம் ஆண்டு, சனவரி மாதம் 3ஆம் தேதி என்பதை எழுத 1974—1—3 என்றே எழுதுவர். இந்த முறைதான் அவர்களுடைய ரூபாய் நோட்டிலும் காணப்படுகிறது.

3—1—1974 என்பது ஆங்கிலமொழி வழக்கத்தைச்சேர்ந்தது Third day of Janua y, Ninteen seventy four என்பதன் எண் வடிவம். தம் மொழி மரபிற்கு ஏற்றது எனத் தெரிந்தால் அவ்வாறு மாற்றிக்கொள்வதற்கு இலங்கை அரசாங்கம் தயங்குவதில்லை.

# 'சதா சொர்க்கலோகமான'

# யாழ்நகர்

கொங்கு நாட்டில் விஜயமங்கலத்தில் உள்ள ஒரு கலவெட்டு அவ்வூரை "சதா சொர்க்கலோகமான விஜயமங்கலம்" என்று குறிப்பிடுகின்றது. சொர்க்கலோகம் எப்படியிருந்திருக்கும் என்று யாரும் கண்டதில்லை. ஆனால் நான்காவது உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாடு இலங்கை-யாழ்பாணத்திலே நடந்த சனவரி முதல் வாரத்தில் யாழ்பாணம் எப்படியிருந்ததோ அப்படித்தான் சொர்க்கலோகம் இருந்திருக்கவேண்டும்.

நாடே விழாக்கோலம் பூண்டதென்ற சொல்லின் பொருள் அங்குதான் விளங்கிற்று. யாழ்நகர் மட்டுமின்றி நெடுந்தொலைவு உள்வாங்கிய சிற்றூர்களிலெல்லாம் அலங்காரத் தோரணங்கள், வளைவுகள், பெற்று கோலாகலமாகத் திகழ்ந்தன.

பனங் குறுத்தோலைத் தோரணம் வீடுகளிலும், எல்லாத் தெருக்களிலும், எல்லாச் சாலைகளிலும் நீக்கமற நிரம்பியிருந்தது.

வீடுதோறும் வாழை மரங்கள் வெட்டிவந்து கட்டியிருந்தார்கள். மாவிலைத் தோரணங்கள் கட்டியிருந்தார்கள். பனை மரங்களை, முழு மரங்களை வெட்டி வந்து நட்டு வைத்தனர். அதே போலப் பனை மரங்களும் முழு மரங்களாக வெட்டி வந்து நட்டனர் பாக்கு மரங்களும் முழுதாக வந்து நின்றன.

நட்டுவைத்த பனைமரத்தில முழு வாழைத்தாரைக் கட்டி வைத்தனர். ஊதிய பலூன்களை எல்லா மரங்களிலும் கட்டி வைத்தனர். இந்த முழு மர நடுகை ஒரு தெரு இரண்டு தெரு மூன்று தெரு என்றில்லாமல் எல்லாத் தெருக்களிலும், ஊர் முழுவதும் நாடு முழுவதும் அழகு பெற்றுத் திழ்ந்தது. கடை வீதி எங்கணும், அழகுக் கோபுரங்கள் அமைக்கபபட்டன ஒன்றுக்கொன்று போட்டியாக அமைந்ததுபோல உயர உயர வளர்ந்தன.

ஒளிமயமான மின்விளக்கு வரிசைகள் ஒவ்வொரு கடையையும்

ஒவ்வொரு தோரணத்தையும், ஒவ்வொரு கோபுரத்தையும் அலங்கரித்தன.

விநாயகர். முருகன், சிவன், உருவப்படங்கள் (cut out) 20 அடி முப்பதடி உயரத்திற்கு வைக்கப்பட்டன. ஆறுமுக நாவலர் போன்ற இலக்கிய, இலக்கணப் புலவர்களின் படங்களை வைத்து அழகு செய்திருந்தனர். அறிஞர் அண்ணாவின் படமும், பொம்மை களும் சில இடங்களில் அமைக்கப்பட்டிருந்தன.

அரசாங்க அலுவலகங்கள், மாதா கோயில்கள் முதலியனவும் அலங்காரம் செய்யப்பட்டிருந்தன. வெளி நாட்டார் சென்ற இடங்களிலெல்லாம் நாதசுரக் கச்சேரியுடன் வரவேற்களிக்கப் பட்டன. வீடுதோறும் பூரண கும்ப மரியாதைகள், எழுத்தால் எழுதிக் காட்டி மாளாது, கண்டாலே தீரும் அளவு அலங்கார நகரமாகக் காட்சி தந்தன யாழ் நகரும் குடா நாடும். ஃ

---

## இஸ்ரேல்—ஒரு முன்னோடி

இன்று தமிழர்கள் பல நாடுகளில் வசிக்கின்றனர். ஆனால் ஒரு இடத்தில்கூட சுயாதிகாரப் போக்குடைய தனி அரசு இல்லை, ஆங்காங்கு ஏதாவது பேரரசின் பகுதியாகவே உள்ளது.

தாய்த்தமிழகம், இந்தியாவின் ஒரு பகுதியாக ஏவல் கேட்டுக் கொண்டிருக்கின்றது. பிற நாட்டில் அல்லலுறும் தமிழர்க்கு உத வும் வெளிநாட்டு விவகாரப் பொறுப்பின்றி அடங்கிக் கிடக்கின் றது.

இலங்கையிலோ தனித்துவதத்திற்கே இடமின்றி சிங்கள அர சில் மைனரிட்டி மக்களாக வாழ்கின்றனர்.

எனவே, தமிழர்க்கெனத் தனிப்படை, கொடி, கொண்ட தமி ழர் நாடு இன்றியமையாத் தேவை என ஈழத்துமக்கள் நினைக்கின் றனர். இலங்கை அரசு தன் அடக்குமுறைகளை அதிகரித்துக் கொண்டே போனால், ராணுவ ஆட்சியின் கொடுமை தாளாது பொங்கி எழுந்து வங்காள தேசம்போலத் தனிநாடு ஆனாலும் ஆச்சரியமில்லை.

யூதர்களுக்கென்று இஸ்ரேல் என்ற பெயரில் ஒரு சின்னஞ் சிறு நாடாகிலும் இருப்பதுபோலத் தமிழர்க்கென்று ஒரு நாடு அல்லது ஒரு தீவாவது வேண்டும் என்று கருதுவோர் ஏராளமாக உள்ளனர்.

---

# விருந்தோம்பல்

மாநாட்டிற்கு வந்திருந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகளில் மேனாட்டினரை மட்டும் ஓட்டலில் தங்க வைத்தனர். இந்தியர்களை தனிப்பட்ட செல்வந்தர் வீடுகளில் தங்க வைத்தனர்.

இரா. கணேசன், புலவர் செ. இராசு இருவரும் வழக்குரைஞர் (Proctor) விசுவநாதன் அவர்கள் வீட்டில் நின்றனர்.

கொடுமுடி ச. சண்முகன், ச. பிரகதம் ஆகிய நாங்கள் இருவரும் திரு. குணரத்னம் என்பவர் வீட்டில் நின்றோம். சீமா சில்க் இண்டஸ்ட்ரீஸ் என்னும் பட்டு நெசவுத் தொழிற்சாலையின் அதிபர் அவர். இந்தியா உள்ளிட்ட வெளிநாடுகளிலிருந்து அசல் பட்டு நூல், செயற்கை பட்டு நூல் முதலியவற்றை இறக்குமதி செயது புடவையாக நெய்து தரும் தொழிற்சாலை. அதிலேயே அச்சிடும் பணியும் நடைபெறுகிறது. ஈழ நாட்டின் மிகப்பெரிய தொழிற்சாலைகளுள் அதுவும் ஒன்று.

அவரது வீடு யாழ்ப்பாண நகரை ஒட்டியுள்ள திருநேல்வேலி என்னும் பகுதியில் உள்ளது. புதிதாகக் கட்டிய அழகான வீடு. தோட்டங்களுக்கு நடுவே எழில் சேர்க்கின்றது வசதிமிக்க நவீன வீடு. ஒட்டுவில்லை என்பது வெளியில் பார்த்தால்தான் தெரியும். உள்ளே நவீன வளமனை வசதிகள் அத்தனையும் உண்டு.

திரு. குணரத்னம் அவரது துணைவி இராணி அம்மையார், செல்வர்கள் ரோசன், நீரு, சாந்தி ஆகியோர் எங்களை அன்பால் திணற அடித்தனர். புலால உணவு வகைகளில் உலகத்தில் எத்தனை விதம் உண்டோ அத்தனையும் செய்து அளித்தனர். அரிசி மாவால் செய்த புட்டு, இடியாப்பம் வழக்கமான யாழ்ப்பாண உணவு,எங்களுக்காக தோசை, இட்டிலி செய்துதந்தனர். மட்டை நீக்கினால் அரிசியின் வைட்டமின்கள்போய்விடுகின்றன என்பதால் மட்டையுடன் கூடிய கைக்குத்தல் அரிசியே அங்கு வழக்கம். எங்களுக்காக மட்டைநீக்கிய வெள்ளை அரிசி வாங்கி வந்து அரிசிச் சோறுபடைத்தனர். உணவு வகைகளில் எங்கள் உள்ளத்து உணாவுகளை யூகித்து அறிந்து விதவிதமாய் உணவு படைத்து மகிழ்ந்தனர்

அவர்கள் பயன்படுத்தும் பெரிய படுக்கை அறையை எங்களுக்கு அளித்தனர். அவ்வீட்டின் ஓய்வுஅறை புதுமைமிக்கது.

தங்கள் தொழிற்சாலையில் நெய்த செயற்கைப் பட்டு புடவை ஒன்றினையும் அன்பளிப்பாக ஈந்தனர். அந்த ஒருவாரத்தில் ஊர் நினைவே தோன்றாதபடி புதுமாப்பிள்ளையைப் பேணுவது போலக் காத்தனர். அவர்களின் அன்பிற்கும் விருந்தோம்பலுக்கும் ஈடு சொலல யாரே வல்லார்

—*—

## ஈழம் வழி காட்டுகின்றது

ஈழம் பல வழிகளில் துணிச்சலோடு செயலாற்றுகின்றது. தயங்கித் தயங்கித் தடுமாறுவதில்லை.

1. பெட்ரோல் விலையேற்றிய கையோடு வாரத்திற்கு ஐந்து நாள் வேலை என்ற திட்டத்தைக் கொண்டு வந்துவிட்டது. இந்தியாவில் இன்னும் தடுமாறுகிறோம்.

2. அலுவலகங்கள், பள்ளிகள் எல்லாம் காலை 8 30 மணிக்கு தொடங்கி பற்பகல் 3–30 மணிக்கு முடிந்து விடுகின்றன. அதனால் அலுவலர்கள் கடை, கன்னி செல்ல நேரம் கிடைக்கின்றது. மாலை நேரக் கல்லூரியில் சேர்ந்து படிக்க நேரம் கிடைக்கின்றது.

தமிழ்நாட்டில் வேலை நேரத்தை மாற்ற எவ்வளவோ அமைச்சர்கள் முயன்று பார்த்துவட்டு. கைவிட்டுவிட்டனர். எங்காவது ஒரு மூலையில் யாராவது ஒருவர் எதிர்த்தாலும் போதும். தொப்பென்று கைகழுவி விடுகின்றனர்.

3. ஈழத்தில் தமிழ்ப் பிள்ளைகள் பல்கலைக்கழகப் புகுமுக வகுப்புவரை தமிழில்தான் கற்கவேண்டும் சிங்களப் பிள்ளைகள் சிங்களத்தில்தான் கற்கவேண்டும். அதற்குமேல் பட்டப்படிப்புகளும், பன்னுட்பியப் (polytechnic) படிப்புகளும்கூடத் தமிழிலும் சிங்களத்திலும்தான் கற்றுத் தருகின்றனர்.

தமிழ்நாட்டில் எல்லாக் கல்லூரிகளிலும் தமிழ் என்னும் திட்டம் வந்தது. ஏதோ ஒரு சில முதலாளிகளின் கையேடுகளான பத்திரிக்கைகள் எதிர்த்தும் விட்டுவிட்டோம். பள்ளிக் கல்வியைக்கூட ஆங்கிலத்தில் போதிக்க ஏராளமான பள்ளிகள் தமிழ் நாட்டில் உள்ளன.

# "தூதுணம் புறவு"

S. தன்யகுமார், M., Sc
மாநிலக் கல்லூரி, சென்னை-5

உருத்திரங்கண்ணனார் தனது நூல் பட்டினப்பாலையில் சோழ வளநாட்டின் தலைமையிடம் காவிரிபூம்பட்டினத்தின் சிறப்புக்களை எடுத்துக்காட்ட நகரில் நடைபெறும் ஒவ்வொரு நிகழ்ச்சியினையும் விரிவாக கூறுகிறார். நாட்டின் செழுமையினைக்காட்டும் நிகழ்ச்சிகள், வாணிப மேம்பாட்டினை விளக்கும் காட்சிகள். சமய வாழ்க்கைச் சுதந்திரத்தினை சுட்டிகாட்டும் விவரிப்புகள் ஆகியவற்றினால் சோழ நாட்டின் தலைநகரினை நம் கண்முன் நிறுத்துகிறார். நகரின் வளத்தினை விவரிக்கையில் நீண்ட விவரிப்பினை தராது சுருங்கக்சொல்லி நிறையவிளக்குகிறார். மனிதர்களின் நடமாட்டம் மட்டுமின்றி புல்லினத்தின் பழக்க முறைகளையும் கூர்ந்து கவனித்து தனது விவரிப்பில் சேர்த்துள்ளார்.

வேள்வியில் அர்ப்பணிக்கப்பட்ட பொருட்களினால் எழும் புகைமண்டலம் நகரின்புறத்தே வாழும் குயில் பறவைகளை தங்கள் இருப்பிடம் விட்டு பெயர செய்கிறது என குறிப்பிடுகிறார். இடம் பெயர்ந்த குயில் தம் பெடையுடன் புகுதற்கரிய. பூதங்கள் காக்கும் நகரினை அடைகின்றன. இங்கு இவை புறாக்கள் வாழும் இடத்தில் ஒதுங்குகின்றன. புறாக்களைப்பற்றி குறிப்பிடுகையில் "தாதுணம் புறாவு" என குறிப்பிடுகிறார் ஆசிரியர். புறாக்கள் சிறு கற்களை உடகொள்கின்றன என்று விவரித்துள்ளார். தான்ய மணிகளுடன் சிறு கற்களும் உட்கொள்ளப்படுகின்றன என்பதை உன்னிப்பாகக் கவனித்து நமக்குத் தெரிவித்துள்ளார். நம்மில் பலர் புறாக்கள் தான்யமணிகளை கொத்தி உண்பதை பார்த்திருப்போம். தான்யங்களை தெளித்தும் இருப்போம். ஆசிரியர் இத்தகைய சிறு நிகழ்ச்சியினை சிறப்பாக விளக்கும் தன்மை போற்றி இன்புறத்தக்கது.

இனி இவ்விவரிப்பினை விலங்கியல் ஆய்வு உண்மைகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்போம். பறவை இனம்சார்ந்த புறாவிற்கு பற்கள் கிடையா. கடினமான தான்யமணிகளை விழுங்குகின்றன. இவை

எவ்வாறு செரிப்பதற்கு முன் அரைக்கப்படுகின்றன என்பதை அறிய முற்படுகையில் ஆசிரியர் குறிப்பின் உண்மை புலப்படும்.

புறாக்களின் உணவுப் பாதையில் வயிறு பகுதி இரு பகுதிகளாக விவரிக்கப்படுகிறது. முதலில் உள்ள பகுதி குழாய் போன்ற அமைப்புடைய புரோவென்டிரிகுளஸ் (Proventriculus) ஆகும். அடுத்துள்ளது லென்சு வடிவமான அறையாகும். இதனை கிசார்டு (gizzard) என்பர். இவற்றிற்கு அடுத்து குடற்பகுதிகள் கணையம்போன்ற உறுப்புகள் உள்ளன.

புறாக்கள் உட்கொள்ளும் தான்யமணிகள் முதலில் கிராப் (crop) எனும் பகுதியில் சேமிக்கப்படுகின்றன. இப்பகுதியில் வழவழுப்பு சுரப்பிகள் உள்ளன. இவற்றின் இயக்கத்தால் உணவு மென்மையாக்கப்படுகிறது. இதற்கு உடலின் வெப்ப நிலையும் துணைபுரிகிறது. அடுத்து உணவு வயிறு பகுதியினை அடைகிறது முதல் பகுதியான புரோவென்டிரிகுளசிலுள்ள சுரப்பி நீர்கள் உணவினை செரிக்கச் செய்கின்றன. பின்னர் கிஸார்டு பகுதியில் அரைக்கப்படுகிறது. கிசார்டு கடின உட்படலத்தினையும் கனத்த தசை உறைகளையும் கொண்ட பகுதியாகும். உணவு அரைக்கப்படுவதற்கு கிசாடிலுள்ள சிறு கற்கள உதவுகின்றன. புறாக்கள் உட்கொண்ட கற்கள் கிசாடினை அடைகின்றன இங்கு இவை உணவு பொருட்களை அரைக்கப் பயன்படுவது குறிப்பிடத் தக்கது.

சிறு கற்கள் புறாவிற்கு எவ்வகையில் பயன்படுகிறது என்பதை உணர்ந்தாரோ இல்லையோ அது அதனை உட்கொள்கிறது என்பதை கூர்ந்து கவனித்து

"ஆவுதி நறும்புகை முனைஇக் குயில்தம்
மாயிரும் பெடையோ டிரியல் போகிப்
பூதங்காக்கும் புகலருங் கடிநகர்த்
தூதுனம் புறவோடு துச்சிற சேர்க்கும்

(பட்டினப்பாலை)

என விவரிக்கிறார். இவ்வுணவுப் பழக்க முறையினை நெடு நாட்களுக்கு முன்னர் "அழகிய புறவு கற்களை உடகொள்கிறது" என தெளிவாக தெரிவித்த உத்திரங் கண்ணனாரின் நுண் அறிவு போற்றி இன்புறத்தக்கது.

—*—

# "தொல்லியல்"

அ. அப்துல்மஜித், எம்.ஏ.

பண்டைய மக்கள் நம்மிடையே விட்டுச்சென்ற கட்டடங்களின் அழிந்த பகுதிகள், கல்லறைகள், அவர்கள் உபயோகித்த கருவிகள், கலன்கள், அணிகள் முதலியவற்றை முறைப்படுத்தி அவைகளின் மூலம் வரலாற்றை அறிவதும் அவற்றை உபயோகித்த மக்களின் பண்பை அறிவதும் தொல்லியலாகும். தொல்லியலின் நோக்கம். மனிதன் இம்மண்ணில் தோன்றிய நாள் முதல் நேற்று வரை, வாழ்ந்த வரலாற்றை வரையறுத்து அமைப்பதேயாகும். ஆதலின் மனிதனுடன் தொர்புடைய யாவும் இதில் இடம்பெறும்.

நில இயல்படி நாம் வாழும் நிலம் நான்கு பெருங்காலங்களைக் கடந்திருக்கின்றது. அவை யாவன :-

(1) முதற்காலம் (Primary), (2) இரண்டாம் காலம் (Secondary), (3) மூன்றும் காலம் (Tertiary), (4) நான்காம் காலம் (Quarterrary) தொல்லியல் ஆராய்ச்சிக்கு நான்காம் காலம் தான் மிகவும் பயன்படுகிறது. அக்காலத்தில்தான் மனிதன் குரங்கிலிருந்து வளர்ந்து, கல்லால் ஆன கருவிகளைச் செய்து, அவைகளின் மூலம் வேட்டையாடி வாழத்துவங்கினன்.

நான்காம் காலத்தில் இரண்டு கிளைப்பிரிவுகள் இருக்கின்றன அவையாவன :-

(1) பிளைஸ் டோசின் (Pleistocent), (2) ஹாலோசின் (Hole-scene), பிளைஸ்டோசின் என்னும் காலத்தில்தான் முதலில் மனிதன் நிலத்தில் தோன்றினன். இரண்டாவதாக காட்டெருமைகள். குதிரைகள், யானைகள் முதலியன தோன்றின. மூன்ருவதாக இப்பூமியன் அநேகப் பகுதிகள நீண்ட நாட்களாகப் பனியால் மூடப்பட்டிருந்தன. நாம் வசிக்கும் இக்காலம்தான் ஹோலோசின் என்னும் காலம், இக்காலத்தில் மனிதனல் அடக்க முடியாத விலங்குகள் மறைந்து, மனிதனல் பழகக்கூடிய ஆடு, மாடுகள், நாய்கள் முதலியன தோன்றின.

மனிதன் அவ்வக்காலத்துக்கு உபயோகித்த கருவிகளையும், பொருள்களையும்கொண்டே பழைய கற்காலம், புதிய கற்காலம் உலோக காலம் என்றும், வரலாற்றுக் காலம் என்றும் பிரிக்கப் பட்டுள்ளன.

பழைய கற்காலம்:—மனிதக் குரங்கு என்னும் விலங்கு நிலை மாறி, குரங்கு மனிதன் என்னும் பகுத்தறிவுபெற்ற மனிதன் தனக்கு உயிர் வாழ்வதற்கு தேவையான உணவுப் பொருள்களை சேகரிப்பதற்கு கரங்களை கருவியாகப்பயன்படுத்தினன். அக்கருவி கரடுமுரடாகவும் ஒழுங்கற்றதாகவும் செய்யப்பட்டது. ஆகவே அக்காலத்தை பழைய கற்காலம் என்று அழைக்கபபட்டது. இக் கருவிகளைக்கொண்டு பழைய கற்கால மனிதன் விலங்குகளை வேட்டையாடி உண்டான் மேலும் இக்கற்கருவிகளேயல்லாமல் மரக்குச்சிகளாலான ஆயுதங்களையும், எலும்புகளாலான ஆயுதங் களையும் உபயோகித்து வந்தான்,

இந்தியாவில் பழைய கற்காலத்தில் மனிதன் வாழ்ந்து வந் தான் என்பதற்கு ஆதாரமாக முதன் முதலில் 1893 ஆம் ஆண்டு ராபர்ட் புரூஸ்புரூட் என்பவர் சென்னைக்கு அருகிலுள்ள பல்லா வரத்தில் ஒரு பழைய கற்காலக் கருவியைக் கண்டுபிடித்தார்.

நதிக்கரைகளில் கிடைக்கும் குழாங்கற்களைக் கொண்டு இரண்டு மூன்று சில்லுகள் பேர்த்தெடுத்து ஒரு கூர்மையான முனையை உண்டாக்குவர். இதைக் கைக் கோடாரிகள் என்பார் கள். இம்மாதிரியான கைக்கோடாரிகள் சென்னைக்கு அருகே யுள்ள அத்திரம்பாககம், வடமதுரை எனனும் இடங்களில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

பழங்கற்காலமக்கள் உணவுப்பொருளைத் தேடவேண்டியிருந் ததால் ஒரு குறிப்பிட்ட இடத்தில் தங்காது சுற்றித் திரிந்தார்கள். அவ்வாறு சுற்றித் திரியும் பொழுது இரவுநேரங்களில் மலைக் குகைகளில் தங்கி வசிக்கத் தலைப்பட்டனர். இவ்வாறு வசித் தனர் என்பதற்குச் சான்றாக சென்னைக்கருகிலுள்ள குடியம என்ற இடத்திலுள்ள குகைகளில் பழையகற்காலக் கருவிகள் கண்டு பிடிக்கப் பட்டன.

மேற்கூறியவற்றிலிருந்து தமிழகத்தில் கற்காலத்திலிருந்தே மனிதன் வாழ்ந்திருக்கின்றான் என்று அறியலாம். இக்கற்கருவி கள் செங்கற்பட்டு, வடாற்காடு, சேலம் மாவட்டங்களில் மலைகள் நிறைந்த பகுதிகளில் காணப்படுகின்றன. ஆதலின் கற்கால மனிதன் அப்பகுதிகளில் வாழ்ந்திருக்கின்றான் என்று அறியலாம்.

வடார்க்காடு மாவட்டத்திலுள்ள பையம்பள்ளி என்னுமிடத்தில் நடந்த அகழ்வாழ்வின் மூலம் புதிய கற்கால மக்கள் உலோகத்தைப் பயன்படுத்த வில்லையென்றும், கூரை வேய்ந்த இல்லங்களில் வாழ்ந்தனர் என்றும் கண்டுபிடிக்கப்பட்டது. வெள்ளிநிற சாம்பல் நிறமுள்ள மட்பாண்டங்களையும் சிவப்பு நிறமுள்ள மடபாண்டங்களையும் அவர்கள் பயன்படுத்தினர். இங்கு நடைபெற்ற அகழ்வாழ்வின் மூலம் புதிய கற்கால மக்களுக்குப் பின்னர் பெருங்கற்சின்னங்களைப் பயன்படுத்திய மக்கள் தங்கள் வாழ்க்கையைத் தொடங்கினர் என்று திண்ணமாக அறியப்படுகின்றது.

தமிழகத்தைப் பொறுத்த மட்டில் புதிய கற்காலம் முடிய வரலாற்றுக்கு முற்பட்ட காலமாகும். புதிய கற்காலத்திற்குப் பிறகு தமிழகத்தில் சிறப்பாகக் காணப்படுவது பெருங்கற்காலமாகும். பெருங்கல் மரபு, புதியகற்காலத்திற்குப் பின்னர் சிறப்படைகிறது, தமிழகத்தில் வரலாற்று காலம் என குறிக்கப்படுவது சங்ககாலம் முதல் ஆகும். சங்ககாலம் என்பதை கிறிஸ்துவிற்கு முன் முந்நூறு ஆண்டில் தொடங்கி கிறிஸ்துவிற்குப்பின் இருநூறு ஆண்டுகள் இருந்ததாக வரலாற்று ஆசிரியர் குறிப்பர். புதிய கற்காலம் கி. மு. 700 இல் முடிவடைகிறது. பெருங்கல் மரபு கி. மு. 700 லேயே தொடங்குகிறது. ஆதலின் இது வரலாற்றுக்கு முற்பட்டதுதான். எனினும் சங்ககாலத்திலும் இப்பண்பு பரவலாக பரவியிருந்தமையின் இதை சங்ககாலத்தை ஒட்டியதாக கொள்ளலாம், ஆதலின் இது அடுத்து வரும் தலைப்பில் விரிவாக குறிக்கப்படுகிறது.

oooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooo

## எழுத்துப் பெயர்ச்சி

தமிழ் நாட்டில் எழுத்துப் பெயர்ச்சி அதிகமாக இருப்பதாக ஒரு யாழ்-தமிழர் குற்றம்சாட்டினர். எடுத்துக்காட்டாக Hair Dressing Hall என்ற ஆங்கில பெயருக்குக் கீழ் 'ஏர் டிரசிங் ஆல்' என்றே எழுதப்பட்டிருப்பதாகக் கூறினர்.

தமிழில் எழுத்துப் பெயர்க்காமல் மொழிபெயர்த்து முடி திருத்தம் என்று எழுதினால் என்ன என்பது அவர் கேள்வி.

ஆங்கிலத்தில் பெயர்வைத்துவிட்டு. தமிழில்கூட எழுதவதினால்தான் இப்படி நேருகின்றது. தமிழில் பெயர்வைத்து விட்டு ஆங்கிலத்தில் எழுதினால் Mudi Thiruthagam என யாரும் எழுதுவதில்லை, என்கிறார் அவர். ஆங்கிலத்திற்கு மட்டும் நேர்வழி கையாளுகின்றீர்கள், தமிழுக்கு அதை மறந்துவிடுகிறீர்களே, ஏன் என்கிறார் அவர்.

oooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooo

இந்திய நாட்டில் பழைய கற்கருவிகளில் இருமரபுகள் காணப் படுகின்றன ஒன்று பஞ்சாப் மாநிலத்தில் 'சோவான்' நதிக் கரையில் திகளப்தறு ஆகும். இம்மரபில் குழாங்கல்லின் ஒரு புறத்தை மட்டும் செதுக்கி கருவியாக்குவர். இதை ஒருமுகக் கருவி (Unifacial type)என்பர். சோவான் கரையில் கிடைத்த தால் இதை சோவான் மரபு என்பர். மற்றது இருமுகங்களிலும் செதுக்கி கருவியாக்குவது. இதை இரு முகக்கருவி (Rifacial) என்பர். இது முதன் முதலில் சென்னையில் கண்டு பிடிக்கப்பட்ட தால் சென்னை மரபு (Madras Industry) என்பர்

**நுண்கருவிகள்:—**

பழைய கற்காலம் முடியும் தருவாயில் மிக நுண்ணிய கற் கருவிகள் செய்யப்பட்டன. இவற்றை மரத்தாலோ அல்லது எலும்பாலோ ஆன பிடிகளில் இட்டு அரிவாளாகவும் கருக்கரி வாளாகவும் உபயோகித்தனர். இக்கருவிகள் மத்திய இந்தியா விலும், தென்னிந்தியாவிலும்தான் ஏராளமாகக் கிடைக்கின்றன. சிறப்பாக திருநெல்வேலி மாவட்டத்தில் கடற்கரைப் பகுதிகளில் தேரி என்னும் பகுதிகளில் கிடைக்கின்றன. இவற்றை தேரி மரபு (Teri Industry) என்பர்.

**புதிய கற்காலம்:**

காடுகாடாக அலைந்து உணவை தேடித்திரிந்த மனிதன் ஓர் இடத்தில் நிலைத்து இருக்கத் தலைப்பட்டான். உணவுப் பயிர் களை பயிர்செய்ய கற்றான் ஆதலின் உணவு சேகரிக்கும் காலம் மறைந்து உணவு உண்டாக்கும் காலம் தொடங்கியது. அதனால் நிலையான வீடுகளும், ஊர்களும் ஏற்பட்டன. மனிதன் வீட்டு வேலைகளுக்கு விலங்குகளைப் பழக்கினான், மட்பாண்டங்கள் செய்றவும், துணி நெய்யவும் கற்றுக் கொண்டான். மனிதன் பயிர் செய்தல் விலங்குகளைப் பழக்குதல் துணி நெய்தல் மட் பாண்டம் செய்தல் ஆகியவற்றை கற்றதால அவன் வாழ்க்கை யுல் பெரும் மாற்றம் ஏற்பட்டது. ஆதலின் அதை புதிய கற்கா லப் புரட்சி என்பர்.

புதிய கற்காலத்தில் இறந்தவர்களை குழி தோண்டி புதைத் தனர். தமிழகத்தில் புதியகற்கால மனிதர்கள் வாழ்ந்தார்கள என்பதல்குச் சான்றாக புதிய கற்காலக் கருவிகள் கிடைத்துள் ளன. மதுரை மாவட்டத்திலுள்ள வெள்ளாள் குளம் என்னு மிடத்திலும் சேலம் மாவட்டததிலுள்ள சேர்வராயன் மலைக்குன்று களி லும், வட்டலமலை என்னுமடத்திலும் புதிய கற்காலக் கருவி கள்கண்டுபிடிக்கப் பட்டன. புதிய கற்காலக் கருவிகளும் முகவும் வழுவழுப்பாக செய்யப பட்டன.

## இந்தியாவிலிருந்து பங்கு பற்றியோர்

**தமிழ்நாடு**

1. புலவர் செ. இராசு - ஆசிரியர், கொங்கு
2. திருமதி ச. பிரகதம் - பதிபபாசிரியர், கொங்கு
3. கொடுமுடி ச. சண்முகன் - பொதுப்பணி துறை
4. இரா. கணேசன் - சென்னைப பல்கலைக்கழகம்
5. வண தந்தை இராசமாணிக்கம் - லயோலா கல்லூரி
6. பேரா. நயினா முகமது – ஜமால் முகமது கல்லூரி, திருச்சி

**பெங்களூர்**

7. நீலகண்டன் – பெங்களூர் தமிழ்ச் சங்கத் தலைவர்

**கோவா**

8. ரேன தா தேசா
9. அவரது மகள்

**தில்லி**

10. Dr. சாலை இளந்திரையன்
11. Dr. சாலினி இளந்திரையன்
12. Dr. மோசூர் வாசுகி அம்மையார்
13. Dr. ரவீந்தர் குமார் சேத் (இந்தி தாய்மொழி)

**லக்னௌ**

14 வி ஆர். பாலசுப்ரமணியம்

---

### கலாநிதி

டாக்டர் பட்டத்தை இலங்கைத் தமிழர் அனைவரும் கலாநிதி என்றே வழங்குகின்றனர். மருத்துவத் துறையில் பட்டம் பெற்றவரை மருத்துவக் கலாநிதி என வழங்குகின்றனர்.

தமிழ் நாட்டில் பண்டாரகர் என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றோம். மருத்துவரைப் பண்டுவர் என்று குறிப்பிடுகின்றோம்.

---

## ஈழத்து ஏடுகள்

ஈழத்தில் பெரும்பாலான தமிழ் ஏடுகள் அரசுடமையாக்கப் பட்டுவிட்டன. 'ஈழ நாடு' யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவருகிறது. மாநாட்டுச் செய்திகளை அதிகம் தந்தது இதுதான். 10ந் தேதி ஏட்டில் கொடுமுடி ச. சண்முகன் அவர்களின் 'இருமொழி தட்டச்சு', இரா. கணேசன் அவர்களின் 'தமிழ்ச் சொற்றொடரியல் முறையில் கணக்கியல்' என்ற கட்டுரைகளின் சுருக்கங்களை வெளியிட்டது. கட்டுரைகளின் சுருக்கங்களுள் இவையிரண்டு மட்டுமே நாளேட்டில் இடம் பெற்றன.

அடுத்தபடியாக செய்தி வெளியிட்ட தினசரி வீரகேசரி ஏடு ஆகும். வெளிநாட்டினர் படங்களை அவ்வப்போது வெளியிட்டு அறிமுகம் செய்தது. மாநாட்டுச் செய்திகளையும் ஓரளவு தந்தது. இது அரசுடைமையாக்கப்பட்ட ஏடு.

சுதந்திரன் என்ற வார ஏடும் அதிகச் செய்திகளைத் தந்தது. 'ஈழமணி' என்ற வார ஏடும் நல்ல முறையில் குறிப்புகள் தந்தன. 'கலைக்கண்' என்ற ஏடு தமிழக ஆளுநர் கே. கே. சா அவர்களின் கட்டுரையை ஆங்கிலத்திலும், தமிழிலும் முழுக்கப் பிரசுரம் செய்தது.

மேலும் தினபதி, தினகரன் என்ற நாளேடுகள் சிறிய அளவில் செய்திகள் வெளியிட்டன.

மாநாட்டுச் செய்தியே போடாத தமிழ், ஆங்கில தினசரிகளும் இருந்தன.

### தமிழ்நாட்டுப் பத்திரிகைகளின் அவல நிலை

18 மைலுக்கு அப்பாலுள்ள யாழ்ப்பாணத்தில் நான்காவது உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. விசாக் கொடுக்காமல் மறுக்கின்றது இலங்கை அரசாங்கம்.

தமிழ் நாட்டுப் பத்திரிகைகளோ மீளாத் தூக்கத்தில் ஆழ்ந்துள்ளன. ஒரு வாரம் கோலாகலமாக நடைபெற்ற மாநாடுபற்றி ஒரு செய்தியைக் காணோம்.

கடைசி நாள் கண்ணீர்ப்புகைப் பிரயோகத்தால் இவற்றின் தூக்கம் கலைந்தது. கண்ணீர்ப்புகை பற்றி ஒரு செய்தி வெளியிட்டுவிட்டு மீண்டும் தூங்கத் தொடங்கிவிட்டன.

தமிழறிஞர்கள் மேடையிலிருந்தபோதே மேடைமீது கண்ணீர்ப்புகை வீசப்படுகிறது. இதைத் தட்டிக்கேட்டுத் தலையங்கம் எழுதப் பத்திரிகைகள் (தினமணி தவிர) முன்வரக் காணோம்.

# ஈழத்தில் தமிழின் உத்தியோக பூர்வநிலை

சூ. செல்வச்சந்திரன், இலங்கை

1956 ஆம் ஆண்டு சிங்களம் அரசகரும மொழியாக்கப்பட்ட வுடன், தமிழ் அதற்குள்ள நிலையை இழந்தது.

தமிழ் மொழியைக் கல்வி கற்பிக்கும் மொழியாக, பொதுச் சேவையில் சேர்வதற்குப் பரிட்சை மொழியாக, தமிழ்மொழி மூலம் கல்வி கற்றவர்கள் தமிழ்மொழி மூலம் கடிதத் தொடர்பு செய்யும் மொழியாக, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ளு ராட்சி மன்றங்களின் மொழியாக, வடக்கு, கிழக்கு மாகாணங் களில் விதிக்கப்பட்ட நிருவாக நோக்கங்களின் மொழியாகப் பயன்படுவதற்கு 1958ஆம் ஆண்டின் தமிழ் மொழிச் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம் வழி வகுத்தது.

1966ஆம் ஆண்டின் தமிழ் ஒழுங்கு விதிகள், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அரசாங்க அலுவல்களுக்கும் தமிழ்மொழி மூலம் கல்வி கற்றவர்களின் கடிதத் தொடர்புக்கும், வடக்கு, கிழக்கு மாகணங்களிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் அலுவல்களுக் கும் தமிழைப் பயன்படுத்துவதற்கும், அரசாங்க வெளியீடுகள், சுற்றறிக்கைகள், படிவங்கள் போன்றவற்றைத் தமிழிலும் வெளி யிடுவதற்கும் ஏற்பாடு செய்தது.

1972 ஆம் ஆண்டின் இலங்கை அரசியலமைப்பு, அரசகரும மொழி சிங்களம் என்றும், தமிழ் மொழியின் உபயோகம் 1958 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கத் தமிழ்மொழி (விசேட ஏற்பாடு கள) சட்டத்திற்கிணங்கவிருத்தல் வேண்டும் என்று கூறுகின் றது. தமிழ் மொழியின் உபயோகம் பல கட்டளை சட்டங்களி லும் இருந்தாலும், அரசியமைப்பு, தமிழ் மொழியின் உபயோ கத்தை 1958 ஆம் ஆண்டின் தமிழமொழி (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்திற்கு மட்டுப் படுத்துகின்றது.

இலங்கை அரசியலமைப்பு, சட்டமாக்கமொழி தொடர்பாக சிங்களத்தில் இயற்றப்படும் சட்டத்திற்குத் தமிழ் மொழி பெயர்ப்பு இருக்க வேண்டுமென்றும், அரசியலமைப்புக்கு முந் திய சட்டங்கள் தமிழ் மொழிபெயர்ப்பிலும் வெளியிடபபடல் வேண்டும் என்று கூறுகின்றது.

ஏதேனும் நீதி மன்றத்தில் பதிவேட்டில் சமர்ப்பிக்கப்படும் வழக்குரைகளுக்கும் வழக்கு நடவடிக்கைகளுக்கும் சிங்களம் பயன்படுத்தப்படுதல் வேண்டுமென நீதியமைச்சர் பணிக்கலாமென 1961ஆம் ஆண்டின் நீதிமன்ற மொழிச்சட்டம் கூறுகின்றது.

இலங்கை அரசியலமைப்பு. நீதிமன்றமொழி சிங்களமாதல் வேண்டும் என்றும், வடக்கு கிழக்கு மாகாணங்களில் முதனிலை நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கும் நிறுவனங்களின் விடயத்திலும் வேறு நிறுவனங்களின் விடயத்திலும், தேசிய அரசுப் பேரவை வேறு விதமாக ஏற்பாடு செய்யலாமென்றும், வடக்கு கிழக்கு மாகாணங்களிலும் முசுலிம் திருமண மணநீக்கச் சட்டத்தின் கீழ் காதிமார்முன் வரும் நடவடிக்கைகளிலும் வழக்குரைகள் போன்றவைகள் தமிழில் சமர்ப்பிக்கலாம் என்றும் கூறுகின்றது. ஈழத்திலுள்ள வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முதனிலை நியாயாதிக்கும் பிரயோகிக்கும் குறித்த சில நிறுவனங்களின் விடயத்தில் தமிழ் மொழியைப் பயன்படுத்துவதற்கு 1973 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க நீதிமன்றங்களின் மொழி (சிறப்பேற்பாடுகள்) சட்டம் ஏற்பாடு செய்கின்றது.

ஆரம்பக் கட்டத்தில் தாய்மொழி மூலம் கல்வி கற்பிப்பதற்கு ஏற்பாடுகள் இந்தியாவில் உள்ளன. ஆனால் ஈழத்தில் தாய்மொழி மூலம் கல்வி கற்பிக்கப்படுதல் வேண்டுமென்று கூறும் உரிமை இல்லை. எனவே ஈழத்தில் தமிழ்மொழிக்கு நிருவாகத்துறையிலும் நீதித்துறையிலும் மட்டும் ஓரளவு இடம் கொடுக்கப்பட்டுள்ளது.

—*—


# கொங்கு

| | உருபா |
|---|---|
| ஆண்டுக் கட்டணம் | 3 50 |
| நான்காண்டுக் கட்டணம் | 14 00 |
| ஆயுட் கட்டணம் | 100 00 |
| வெளியீடுகள் : | |
| ஆய்வுத் தேன் | 4 00 |
| ஆய்வுக்கொத்து | 5 00 |
| கொங்கு முதல் தொகுதி 1971 | 5 00 |
| கொங்கு இரண்டாம் தொகுதி 1972 | 5 00 |

வேண்டுவோர் எழுதுக:

நிர்வாகி, கொங்கு, 26, இந்திரா நகர், சென்னை-600020.



தொண்டு செய்தே பழுத்த பழம்

# சல்லிக்கட்டு

தமிழகத்துப் பொங்கல் விழாவில் இந்த ஆண்டு பண்டைப் பெருமைமிக்க 'மஞ்சு விரட்டு' முதன்மை வகித்தது. 'சல்லிக் கட்டு' என்பதே அதன் பெயர். 'சல்லி' என்பது ஒரு வகை காளை இனத்தின் பெயர். அதனால் அப்பெயர் வந்ததாம். இன்னொரு வகையாகவும் சொல்வர். அடக்க வேண்டிய காளையின் கொம்புகளின் நடுவில் பரிசுத் தொகையைக் கட்டுவார்களாம். காளையை அடக்குவோர் அதைப் பெருவர். சல்லி என்பது நாணயத்தின் பெயர். சல்லியைக்கட்டி காளையை விரட்டுவதால் சல்லிக்கட்டு என்று பெயர் பெற்றது என்பர். கல்லாப பெருமக்கள் அதை ஜல்லிக்கட்டு என ஓசை பிறழ அழைத்தனர். சென்னை வந்துகூட அதே பெயர் நிலைத்து விட்டது. ஆங்கிலத்திலும் Jallikattu என்றே எழுதுகின்றனர்.

அகில இந்திய வானொலியின் பேட்டி ஒன்றில் மதுரைக்காரர் கூறியவை இவை.

பொங்கல் நல் வாழ்த்துகள்

கட்டு வேலைகளுக்கு

கருங்கல் சல்லி
செங்கல்
செங்கல் சல்லி
மணல்
செஞ்சல்லி மண்

எங்களை அணுகிடுவீர்

குறித்த நேரம்! குறைந்த விலை!! நல்ல தரம்!!!

குமாரி சச்சிதானந்தம்

53, இரண்டாம் தெரு, வரதாபுரம்,

கோட்டூர், அடையாறு, சென்னை-600085.

Phone Offi. : 83745 Resi. : 811455


# RAVI METAL WORKS

Manufacturers of :

**Automobile Agricultural Components**
**Sanitary & Pump Fittings**

**3/129, Dr. NATESAN ROAD,**

**TRIPLICANE : : MADRAS-5.**




ஆசிரியர் : புலவர் செ. இராசு
அச்சிட்டவர் : து. இராஜலட்சுமி
ரேணுகா பிரிண்டர்ஸ், சென்னை-20
வெளியிட்டவர் : ச. பிரகதம்
அலுவலகம் : 26, இந்திரா நகர், சென்னை-600020.